DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -66/2024

Prosecution PW -1

| | | |
|---|---|---|
| Name | திரு.பி.சிவக்குமார் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 04.02.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 Produced on PT warrant through VC A3 Produced on VC A4 Present on memo by the counsel for A1,A3 witness being examined.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது கடலூர் போக்குவரத்து காவல் நிலைய உதவி ஆய்வாரளாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.02.2023 ம் தேதி பண்ருட்டி போக்குவரத்து காவல் நிலைய உதவி ஆய்வாளராகப் பணியிலிருந்தபோது, பண்ருட்டி போக்குவரத்து காவல் ஆய்வாளர் பரமேஸ்வரன் பத்மநாதன் அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், என்னையும் முதல்நிலை காவலர்கள் சபரிநாதன், நீலகண்டன், கார்த்திகேயன் என்பவரை அழைத்து கொண்டு, பண்ருட்டி-சென்னை செல்லும் மெயின்ரோட்டில் சித்திரைசாவடி பஸ் நிறுத்தம் அருகே 13.45 மணிக்கு வாகனத்தணிக்கை செய்த போது, TN-45-BR-4595 என்ற பதிவெண் கொண்ட சில்வர் கலர் டோயோட்டோ எடியோஸ் கார் கோலியனுார் மார்க்கத்திலிருந்து பண்ருட்டி நோக்கி வந்த காரை நிறுத்தி சோதனை செய்த போது, காரில் டிரைவர் சீட்டிற்கு அருகே அமர்ந்து வந்த நபரின் காலுக்கு கீழே வெள்ளை நிற சாக்குப்பையில் ஏதோ ஒரு பொருள் வைத்திருந்தார். பின் சீட்டில் அமர்ந்திருந்த ஒரு நபர் தன் இருக்கை அருகே ஒரு பெரிய சூட்கேஸ் வைத்திருந்தார், அவரை விசாரித்தபோது முதலிவ் முன்னுக்குப்பின் முரணாக கூறினார்கள் பின்னர் அவரை விசாரிக்க காரில் பின் இருக்கையில் அமர்ந்திருந்த நபர் தன் பெயர் நதீஷ் என்றும், யாழ்பாணம் இலங்கையை சேர்ந்தவர் என்றும் கூறிய உடன் தன் பாஸ்போட்டை காண்பிக்க ஆய்வாளர் கேட்டதை அடுத்து தான் 12 வருடங்களாக திருச்சியில் தங்கியிருப்பதாகக் கூறினார். முன்இருக்கையில்

அமர்ந்திருந்தவரை விசாரிக்க அவர் தன் பெயர் மாதவன் என்றும், திருச்சியை சேர்ந்தவர் என்றும், திருச்சி அகதிகள் முகாமில் இருப்பதாகக் கூறினார். காரிலிருந்து தப்பி ஓட முயன்றவர்களை மடக்கிப்பிடித்து என்னையும் ஆய்வாளர் அவர்களையும் அறிமுகம் செய்து கொண்டு எங்களையும் அறிமுகம் செய்து ஆய்வாளர் 1வது எதிரியிடம் தாங்கள் கஞ்சா எனும் போதைப்பொருள் வைத்துள்ளதாக தகவல் வந்துள்ளதாகவும், உங்களை சோதனை செய்ய வேண்டும் என்றும் அவ்வாறு சோதனை செய்ய உங்களை நீதித்துறை நடுவரிடமோ, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிடமோ சோதனை செய்து கொள்ள உங்களுக்கு உரிமை உள்ளது என்று சொல்லி, சோதனை அறிவிப்பு நமுனா சார்வு செய்தார். அதற்கு அந்த நபர் அவ்வாறு தேவையில்லை, ஆய்வாளராகிய நீங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னார். அந்த சோதனை அறிவிப்பு நமுனாவில் நானும் சபரிநாதனும் கையெழுத்து போட்டோம். அந்த சோதனை அறிவிப்பு நமுனா அ.த.சா.ஆ-**1**. பின்னர் 1வது எதிரியை விசாரிக்க எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை ஆய்வாளர் என் முன்பாகவும் சபரிநாதன் முன்பாகவும் பதிவு செய்தார். பின்னர் ஆஜர் செய்த சூட்கேஸ் திறந்து சோதனை செய்தபோது 10 கிலோ கஞ்சா இருந்தது. 2வது எதிரி மாதவன் வைத்திருந்த சாக்குப்பையை சோதனை செய்த போது 6 கிலோ அளவிற்கு கஞ்சா இருந்தது. 10 கிலோ கஞ்சாவில் இருந்து மாதிரிக்காகவும் பகுப்பாய்விற்காகவும் இரண்டு 50 கிராம் வீதம் கஞ்சாவை எடுத்து பாலிதீன் கவரில் போட்டு, காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, SHO சீல் வைத்தார். சாட்சிகளாக நானும் சபரிநாதனும் கையொப்பம் செய்தோம், ஆய்வாளரும் எதிரியும் கையொப்பம் செய்தார்கள். மீதம் உள்ள 9.900 கிலோ கஞ்சாவை அதே பாலிதீன் கவரில் போட்டு காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, ஆய்வாளர் SHO சீல் வைத்தார். சாட்சிகளாக நானும் சபரிநாதனும் கையொப்பம் செய்தோம், ஆய்வாளரும் எதிரியும் கையொப்பம் செய்தார்கள். மாதிரி கஞ்சாவையும் மீதம் உள்ள கஞ்சாவையும் மற்றும் நீல பச்சை நிறம் கலந்த டிராலி சூட்கேஸ் ஒன்று வெள்ளை நிற சாக்குப்பை மற்றும் நான்கு சக்கர வாகனம் கைப்பற்றுதல் மகசரில் என் முன்பாகவும், சபரிநாதன் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் அ.த.சாஆ-**2**. 2வது எதிரி மாதவன் வைத்திருந்த சாக்குப்பையை சோதனை செய்த போது 6 கிலோ அளவிற்கு கஞ்சா இருந்தது. 6 கிலோ கஞ்சாவில் இருந்து மாதிரிக்காகவும் பகுப்பாய்விற்காகவும் இரண்டு 50 கிராம் வீதம்

கஞ்சாவை எடுத்து பாலிதீன் கவரில் போட்டு, காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, SHO சீல் வைத்தார். சாட்சிகளாக நானும் சபரிநாதனும் கையொப்பம் செய்தோம், ஆய்வாளரும் எதிரியும் கையொப்பம் செய்தார்கள். மீதம் உள்ள 5.900 கிலோ கஞ்சாவை அதே பாலிதீன் கவரில் போட்டு காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, ஆய்வாளர் SHO சீல் வைத்தார். சாட்சிகளாக நானும் சபரிநாதனும் கையொப்பம் செய்தோம், ஆய்வாளரும் எதிரியும் கையொப்பம் செய்தார்கள். மாதிரி கஞ்சாவையும் மீதம் உள்ள கஞ்சாவையும் மற்றும் VIP gold என்ற வாசகம் உள்ள வெள்ளை நிற சாக்குப்பை ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் என் முன்பாகவும், சபரிநாதன் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் அ**.**த**.**சாஆ**-3.** பின்னர், 17.00 மணிக்கு எதிரிகள் மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார், அதற்கு நான் உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் **A3,A4** தரப்பில்</u>

சம்பவ இடத்தில் 3 வது எதிரி சக்தி, 4 வது எதிரி கீர்த்தி சம்பவ இடத்தில் இல்லை அவர்களிடமிருந்து எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்